இடங்களில் மூன்று நான்கு வருஷங்கள் பாக்கிகள் நின்று விடுகின்றன. ஆகையால் இப்பொழுது நடைமுறை வருஷத்திற்கும், பழைய பாக்கியில் ஒரு பகுதியையும் சேர்த்து வசூல் செய்கிறார்கள்.

Women teachers

* 341 *Q.*—SRI P. G. MANICKAM: *கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—*

(அ) ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலே 1 முதல் 3-ஆம் வகுப்பு வரைக்கும் பெண்களையே ஆசிரியைகளாக நியமிக்கும் திட்டம் அமுலாக்கப்பட்டு வருகிறதா ?

(ஆ) அப்படியாயின் எத்தனை உபாத்தியாயினிகள் தற்போது அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM: *(அ)* There is no proposal to appoint only women as teachers for standards I to III in elementary schools.

(ஆ) Does not arise.

SRI P. G. MANICKAM: *வொயிட் பேப்பரை ஆராய்ச்சி செய்ய நியமிக்கப்பட்ட சட்டசபைக் குழுவினர் இவ்வாறு ஒன்று முதல் மூன்றாவது வகுப்பு வரை பெண்களை ஆசிரியர்களாகப் போடுவது நல்லது என்று சர்க்காருக்கு தெரிவித்து இருக்கிறார்கள். அப்படிச் செய்தால், குழந்தைகளின் நடவடிக்கைகளை அறிந்து பெண்கள் வேலை செய்வார்களாதலால், இதனால் படிப்பின் தரமும் அதிகரிக்கும். ஆதலால் இதுபற்றி சர்க்கார் மீண்டும் கவனம் செலுத்துமா ?*

THE HON. SRI C. SUBRAMANIAM: *கூடிய வரையில் பெண் ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.*

Statute of V. O. Chidambaram Pillai

* 343 *Q.*—SRI S. M. ANNAMALAI: *கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—*

(அ) சென்னை கடற்கரையில் வ. உ. சிதம்பரனார் சிலை வைக்க உத்தேசம் உண்டா ?

(ஆ) மேலும் என்னென்ன சிலைகள் வைக்க திட்டம் உள்ளது ?

THE HON. SRI P. KAKKAN: *(a)* & *(b)* No, Sir.

SRI S. M. ANNAMALAI: *நமது தமிழ்நாட்டில் கப்பல் ஓட்டிய தமிழரின் பெயர் நிலைத்திருக்க வேண்டியாவது இந்த சர்க்கார் மறு பரிசீலனை செய்து சிதம்பரனார் அவர்களின் சிலையை கடற்கரையில் வைக்க முன்வருவார்களா ?*